# சைவ சமய வினா விடை



இரண்டாம் புத்தகம்

# அன்பளிப்பு

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலக
அதிபர்
"சிவநெறிப்புரவலர்", "சிவதர்மவள்ளல்"

**திரு. க. கனகராசா ஜே. பி. அவர்களால்**

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

அவர்களுக்கு
அன்பளிப்பாக வழங்கப்பெற்றது.

"திருஆலவாய்,"
த. பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.

MWS மில்க்வைற்

........................................

# சைவசமய வினாவிடை

## இரண்டாம் வகுப்பு

MILK WHITE SOAP WORKS

அரசினரது
பாடத்திட்டத்துக்கமைய
எழுதப்பட்டது.

எழுதியவர்:

**பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா,**

(பிரதம ஆசிரியர், வண்ணார்பண்ணை
நாவலர் வித்தியாசாலை.)

அன்பு வெளியீடு

உ

சிவமயம்

# முன்னுரை

## சைவசமய வினாவிடை, இரண்டாம் புத்தகம்

இதை ஆக்கித் தந்தவர் பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாத சர்மா அவர்கள். நாவலர் பாடசாலையில் பல ஆண்டுகள் ஆசிரியராய்க் கடமையாற்றுவதால் சமயப்பணி செய்வதில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

மக்கள் எனப்படுவோர் அறிவு, அன்பு, ஒழுக்கம், ஆசாரம் இவை நான்கும் மலரப்பெற்றவர்களே. சமயநெறியில் இளமையி லிருந்து வாழ்க்கை அமைய இப் பண்புகளும் வளர்வனவாம்; இளம் பருவத்தில், சிறுவர்கள் உள்ளத்தில் சமயப் பற்று வளரச்செய்தால், மக்கட்பண்புடையராக வருவார்கள் என்பதை அனுபவத்தில் அறிந்த ஆசிரியர், கதைகளின் வாயிலாக எளிதில் விளங்கத்தக்க வகையில் இதனை எழுதியிருக்கின்றனர். முன்னும், அன்னை லலிதாம்பிகை அருட் பேராயிரம், விநாயக மஹோற்சவ விளக்கம் முதலான நூல்கள் செய்திருக்கின்றார்கள். சமயப்பணி செய்வதிலேயே தமது பிற்கால வாழ்க்கை அமைதல் வேண்டும் என்ற நல்நோக்கம் கொண்ட பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா அவர்களைச் சைவ மக்கள் பாராட்டக் கடமைப்பட்டுள்ளனர்.

அவர்கள் எழுதிய நூல்களை வாங்கிப் படித்து இப் பணியில் அவர்களை ஊக்கப்படுத்தவேண்டுவது சைவ மக்களாகிய நம்மனோர் கடமையாகும்.

கொக்குவில்,<br>23-8-64.

புலவர்,<br>த. குமாரசுவாமிப்பிள்ளை.

# முகவுரை

சிவபெருமானே முழுமுதற் கடவுள். அப்பெருமானை வழி படுகிறவர்கள் சைவசமயிகள். எமது ஈழநாட்டிலே நான்கு சமயத்தவர்கள் இருக்கிறார்கள். சைவசமயம், பௌத்தசமயம், கிறீஸ்த்தசமயம், முகம்மதுசமயம் என்பனவே அந்த நான்கு சமயங்களாகும். புத்தர் பெருமான் உண்டாக்கியது பௌத்த சமயம். கிறீஸ்த்துநாதர் தோற்றுவித்தது கிறீஸ்த்து சமயம். முகமதுநபி காட்டிவைத்தது முகம்மது சமயம். இந்த மூன்று சமயங்களும் உண்டாக்கியவரின் பெயரால் வழங்கப்படுகின்றன. ஆனால், சைவசமயமோ ஒருவரால் தோற்றுவிக்கப் படாதது. அது உலகந் தோன்றிய காலம் முதலாகவே உள்ளது.

மெய்யன்பு கொண்ட வழிபாடுதான் உண்மையான வழிபாடாகும். மெய்யன்பு உண்டாவதற்குச் சமய உண்மைகள் இளம் மனத்திலே நன்ருகப் பதியவேண்டும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் ஆக்கித்தந்த முதலாம் இரண்டாம் சைவவினுவிடைகள் சைவ சமயத்தவர்களுக்கு அருமையான மூலநிதிகளாகும். அவற்றை ஆதாரமாகக் கொண்டு, இலங்கை அரசின் கல்விப் பகுதியார் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்துக்கு இணக்கமாகச் சிறுவர் மனத்தில் சைவசமய உண்மைகள் நன்கு பதியும்படி, சைவசமய வினுவிடை என்ற தொடரில் இந்த இரண்டாம் புத்தகத்தை எழுதத் திருவருள் கூட்டியது.

இத்தொடரின் முதற் புத்தகத்தை ஆதரித்துவரும் சைவ உலகம் இந்த நூலையும் ஏற்றுப் பயன்பெறும் என்ற நம்பிக்கை உடையேன். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்ற உண்மைப்படி அவ்வாறு அமைவதற்கு எல்லாம் வல்ல இறைவனை வணங்குவோமாக.

க. வை. ஆத்மநாதசர்மா,
ஆக்கியோன்.

## பதிப்புரை:

○ சமயக்கல்விக்கு முக்கியம் கொடுக்கப்பட்டுப் புதிய பாடத்திட்டம் வெளிவந்துவிட்டது. அப் பாடத்திட்டத்தை யடக்கி மாணவருக்குரிய முறையில் சமயநூல்களை வெளியிட ஆவற்பட்டோம்.

○ சமயத்தை நன்கு உணர்ந்தவராயும், அறிந்தவராயும், அதுமட்டுமல்லாது கல்வியுலகுடன் பல ஆண்டு பழகிய அனுபவமுங் கொண்ட பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா அவர்களிடம் எமது ஆவலை வெளியிட்டோம். சமயத் தொண்டைத் தமது நல்வாழ்வாக்கி, அதற்கென முழு நேரத்தையும் செலவு செய்து வரும் சர்மா அவர்கள் மனநிறைவுடன் நூலாக்கி யுதவினுர். மாணவருக்கு இலகுவாக்குதற்காக வினு விடையையும் சேர்த்துள்ளார். இதேபோன்று முதலாம் வகுப்பு நூலும் வெளியாகியுள்ளது.

○ இதேபோன்று தொடர்ந்து ஐந்தாம் வகுப்புவரை வெளியிட ஆவலுடனிருக்கின்ருேம்.

முதற் பதிப்பு
செப்ரம்பர், 1964.

விலை ரூபா: 1-00.

விற்பனை:

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

○ கல்வியுலகு நல்லவற்றை ஆதரிக்குமென்று நம்பிக்கையுடையோம். வணக்கம்.

நிர்வாகி,
அன்பு வெளியீடு.

5, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்,
1-9-64.


கொழும்பு ஸ்டுடியோ.

உ

சிவமயம்

# சைவ சமய வினாவிடை

## இரண்டாம் புத்தகம்

## 1. கோயில்.

உலகம் முழுவதற்கும் இறைவனாகிய சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு இடங்கள் தோறும் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறார். சைவசமயிகள் மனத்தூய்மையடைந்து சிறப்பாக வாழ்வதற்கு ஆலய வழிபாடு செய்தல் மிக அவசியமானது. சிவபெருமான் திருவருட்சக்தி சேர்ந்த சிவலிங்க வடிவாகவும், அம்பிகை, விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் முதலிய மூர்த்திகளாகவும் நின்று அருள் செய்வர். முழுமுதற் கடவுளாகிய சிவபிரானே சக்தியுடன் சேர்ந்து பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்னும் ஐம்மூர்த்திகள் வழியாகப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்

தல், அருளல் என்னும் ஐந்தொழில்களை யும் ஆன்மாக்கள் பொருட்டுச் செய் தருளுகிறார்.

## விளக்க வினவிடை

1. கோயில் என்ற சொல்லின் பொருள் யாது?

கோ - என்றால் இறைவன் - கடவுள்: இல் - என்றால் உறைவிடம், எனவே கடவுளை வழிபடும் இடம் கோவிலாம்.

2. உலகத்துக்கு இறைவன் யாவர்?

சிவபெருமான்.

3. சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுகிறவர்கள் யாவர்?

சைவசமயிகள்.

4. சமயம் என்ற சொல்லுக்குப் பொருள் யாது?

மார்க்கம் அல்லது வழி.

5. சிவபெருமான் எப்படிப்பட்டவர்?

இவ்வுலகத்தையும் உயிர்களையும் உண்டாக்கியவர், அவர் ஒருபோதும் பிறவாதவர், ஒருபோதும் இறவாதவர், உயிர்களையெல்லாம் காப்பவர், துன்பப்படும் உயிர்களுக்கு ஆறுதல் கொடுப்பவர். அவர் இல்லாத இடம் இல்லை; அவர் இல்லாத காலம் இல்லை, அவரால் செய்ய

இயலாதன ஒன்றுமில்லை. அவர் அறியாதன ஒன்றும் இல்லை.

6. எங்கும் உள்ள கடவுளை வழிபடுவதற்குக் கோயிலை ஏன் இடமாகக் கொள்ள வேண்டும்?

கடவுளை வழிபடுவதற்கு மனத்தூய்மை வேண்டும். மனம் தூய்மை யடைவதற்குக் கடவுள் நினைவு வேண்டும். மனதில் பிற சிந்தனைகள் குறுக்கிடலாகாது. அமைதியான தெய்வீகக் காட்சிகளைக் கோயில்களிலேயே காணலாம்.



சிவாலயம்

7. கோயிலுக்கு வேறு பெயர் யாது?

ஆலயம்.

8. ஆலயம் என்ற சொல்லுக்குப் பொருள் யாது?

ஆ - என்றால் ஆன்மா - உயிர். லயம் என்பது ஒடுக்கம். எனவே ஆன்மாக்கள் மனம் ஒடுங்கி வழிபாடு செய்யும் இடம் ஆலயமாம்.

9. சிவபிரான் ஆன்மாக்களுக்கு எதன் துணை யால் அருள் செய்கிருர்?


பராசக்தி

சிவசக்தியின் துணையால் அருள் செய்கிருர்.

10. சிவசக்தியாவது யாது?

நெருப்பிலே சூடு இருப்பது போல, சிவபிரானை விட்டுப் பிரியாது உள்ள வல்லமையே சிவசக்தியாம்.

11. சிவசக்தியை வேறு எப் பெயர்களால் குறிக் கலாம்?

ஆதிசக்தி, பராசக்தி, அம் மன், அம்பிகை, உமை எனப் பல பெயர்களால் குறிப்பிட லாம்.

12. சிவபெருமான் வேறு எந்தத் தோற்றங்களில் நின்று ஆன்மாக்களுக்கு அருள் செய்வர்?

விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத் திரர் என்னும் மூர்த்திகளாகவும் நின்று அருள் செய்வர். இம்மூர்த்திகளைச் சிவகுமாரர் என்றுஞ் சொல்லுவர்.

13. சிவபெருமான் உயிர்களுக்காகச் செய் யும் தொழில்கள் யாவை?

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்துமாம்.

14. இந்த ஐந்து தொழில்களையும் சிவபிரான் எந்த மூர்த்திகளைக் கொண்டு செய்தருளு கின்றார்?

பிரமதேவர் மூலமாகத் தோற்றுவித்தலையும், விஷ்ணுமூர்த்தி வழியாகக் காத்தலையும், உருத்திர மூர்த்தி வழியாக ஒடுக்குதலையும் மகேஸ்வரன் வாயிலாக மறைத்தலையும் சதாசிவமூர்த்தி வாயிலாக அருளலையும் செய்தருளுகின்றார்.

15. கோயில்கள் எவ்வெப் பெயரால் குறிக்கப் படும்?

இறைவனது எந்தத் தோற்றத்தை மூல மாகக் கொண்டனவோ அந்த மூர்த்தியின் பெயரால் கோயில்கள் குறிக்கப்படும்.

---

## 2. ஆலய வழிபாடு.

மக்களாகிய நாம் ஒவ்வொரு நாளும் ஆலய வழிபாடு செய்தல் வேண்டும். அதற்கு வாய்ப்பு இல்லையாயின் விசேட காலங்களிலாவது தவறாது ஆலயங்க ளுக்குச் சென்று இறைவனை வணங்க வேண்டும். ஆலயங்களுக்குச் செல்லும்

போது அதற்குரிய முறைகளை அறிந்து கொண்டு, அவற்றைக் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

## விளக்க வினவிடை

1. ஆலய வழிபாடு என்பதன் பொருள் யாது?

கோயில்களுக்குச் சென்று இறைவனை வணங்குதலாம்.

2. ஆலய வழிபாடு செய்யவேண்டியவர் யாவர்?

மக்களாகிய நாம் எல்லோரும் ஆலய வழிபாடு செய்தல் வேண்டும்.

3. சைவசமயிகள் எப்போது ஆலய வழிபாடு செய்ய வேண்டும்?

ஒவ்வொரு நாளும் ஆலய வழிபாடு செய்வதே முறையாகும். தினமும் அவ்வழிபாடு செய்ய வசதியில்லாதவர் விசேட தினங்களிலும், புண்ணிய காலங்களிலும் தவருது வழிபாடு செய்தல் வேண்டும். இதனாலேயே "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என உலக நீதி கூறுகின்றது.

4. வாரத்தில் விசேட தினங்கள் எவை?

ஞாயிறு, திங்கள், செவ்வாய், வெள்ளி, சனி ஆகிய தினங்களாம்.

**5. புண்ணிய காலங்கள் யாவை?**

மாசப்பிறப்பு, வருடப்பிறப்பு, அமாவாசை, பூரணை, பிரதோஷம், சதுர்த்தி, ஷஷ்டி, அட்டமி, ஏகாதசி, துவாதசி, ஆவணிச்சதுர்த்தி, நவராத்திரி, தீபாவலி, கந்தஷஷ்டி, திருக்கார்த்திகை, விநாயகஷஷ்டி திருவெம்பாவை, திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம், சிவராத்திரி, பங்குனி உத்திரம், பெருந்திருவிழாக்காலம் என்பன.

**6. வழிபாடு செய்பவர் கோயிலுக்குப் போகும் முறைமை யாது?**

குளித்துத் தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துக்கொண்டு, சிவசிந்தனை உடையவராய், விபூதி தரித்து, அருச்சனை வழிபாட்டுக்குரிய பொருள்களைக் கையிலேந்திச் செல்லுதல் வேண்டும்.



முறைப்படி ஆலயம் போகிறுர்

**7. அருச்சனைப் பொருள்கள் யாவை?**

தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கர்ப்பூரம், வில்வம், பூ, குங்குமம் முதலாயின.

**8 அருச்சனைப் பொருள்கள் இல்லாமல் வழிபடுதல் கூடாதா?**

இயல்புடையவர் அவற்றைக் கொண்டு சென்று இறைவனிடம் ஒப்புவித்து வழிபாடு செய்யலாம். வசதியில்லாதவர் கூப்பிய கையுடன் சிவநாமங்களை, தேவார திருவாசகங்களை, தோத்திரப்பாடல்களைச் சொல்லி வழிபடுவது தவறாகாது.

9. ஆலயத்தைச் சமீபித்தவுடன் யாது செய்தல் வேண்டும்?

நீர்த்துறையில் கைகால் கழுவிய பின் தூல லிங்கமாகிய கோபுரத்தை வணங்கிக் கொண்டு



கோபுரம்

கோயிலின் உள்ளே புகுதல் வேண்டும்.

10. கோயிலின் உள்ளே புகுவோர் செய்யத் தகாதன யாவை?

சட்டையிட்டுக் கொள்ளுதல், தலைப்பாகை தரித்தல், பாதரட்சை அணிதல் உடம்பைப் போர்த்துக் கொள்ளுதல், வீண்வார்த்தை பேசு

தல், சண்டையிடுதல், சுவாமியின் திருவுருவைத் தீண்டுதல், ஓடுதல், விளையாடுதல், காலை நீட்டியிருத்தல், படுத்து உறங்குதல், உணவு அருந்துதல், உரத்துப் பேசுதல், கோயிற் பொருளைக் கவருதல் என்பன. ஆலயம் வழிபாடு செய்வதற்கு மாத்திரம் உரியதென்பதை எப்பொழுதும் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

## 11. வழிபடுவோர் செய்யவேண்டியன யாவை?

திருச்சந்நிதிகளில் பிறருக்கு இடர் இல்லாமல் ஒரு புறமாக ஒதுங்கி நின்று வழிபாடு செய்தல், இயன்ற தோத்திரப் பாடல்களை அமைதியாகச் சொல்லி வணங்குதல், அருச்சகர் தரும் பிரசாதங்களை வணக்கத்துடன் இருகைகளையும் நீட்டி வாங்குதல், அமைதியாக வீதிவலம் வருதல் கோயில் திருத்தொண்டுகளைப் பக்தியுடன் செய்தல் என்பன.

## 12 கோயில் திருத்தொண்டுகள் யாவை?

திருவலகிடுதல், குப்பைகளை அகற்றுதல், மண்டபங்களைச் சாணங்கொண்டு மெழுகுதல், கழுவுதல், தீபமேற்றுதல், தீவர்த்தி தாங்குதல், சாமரம் இரட்டுதல், பாத்திரங்களைச் சுத்திசெய்தல், பூவெடுத்துக் கொடுத்தல், மாலைதொடுத்தல், சுவாமி வீதிவலம் வரும்போது குடை பிடித்தல், ஆலவட்டம் பிடித்தல், வாகனம் சுமத்தல், முதலாயின. இச்செயல்களைக் கூலிவாங்கிச் செய்தல், இடம்பங்கருதிச் செய்தல் பயனுடைய வணக்கம் ஆகாது.

**13. இறைவன் திருச்சந்நிதியில் ஒவ்வொருவரும் கொள்ளவேண்டிய நினைவுகள் யாவை?**

சிவபரம் பொருள் கருணை நிரம்பியவர், எல்லா உயிர்களுக்கும் சமமாக அருள் பாலிப்பவர், திருத்தொண்டு செய்வதேயன்றி இறுமாப்புக் கொள்பவரும் அதிகாரம் செய்பவரும் தண்டனை பெறுவர். இறைவன் திருமுன்பு நாம் சிறுமையுடையோம், அருச்சகரும் ஆசாரியரும் அடியார்களை இறைவனிடம் வழிப்படுத்துபவர் ஆவர் என்பனவாம்.

---

# 3. திருஞானசம்பந்தர் தேவாரம்.


திருஞானசம்பந்தர்

சைவ சமய குரவர் நால்வர். அவர்களுள் முதல் மூவரே தேவாரம் பாடியவர்கள். அம் மூவருள் ஒருவரே திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார். அவர் பாடிய தேவாரங்கள் முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவர் சிவத்தல யாத்திரை செய்தவர். ஒவ்வொரு தலத்துக்கும் தேவாரங்களைப் பதிகங்களாகவே பாடி

யிருக்கிறார். பத்துப்பாடல் கொண்டது பதிகம் எனப்படும். அவற்றுள் இரு பதிகங்களில் உள்ள ஒவ்வொரு பாடல்களையே இப்பொழுது படிக்கப்போகிறோம்.

## விளக்க வினாவிடை

முதல் பாடல்:-

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம் உறை இறையே.

1. இதனைப் பாடியவர் யார்?

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்.

2. இப்பாடல் எப்பொருளைக் குறிக்கிறது?

விநாயகப் பெருமானது திருத்தோற்றமான வரலாறு குறிக்கிறது.

3. இது எந்தத் தலத்தில் எழுந்தருளிய சிவபிரானைக் குறித்துப் பாடப்பட்டது?

தென்னிந்தியாவிலுள்ள திருவலிவலம் என்ற தலத்தில் கோயில் கொண்ட பெருமானைக் குறித்தது.

## 4. இப்பாடலின் பொருள் யாது?



விநாயகப் பெருமான்

உலகுக் கெல்லாம் தாயாகிய உமாதேவியார் பெண்யானை வடிவங்கொள்ள, நிரம்பிய கொடை வள்ளல்கள் பக்தியோடு வழிபடும் திருவலிவலம் என்னும் தலத்தில்கோயில் கொண்ட சிவபெருமான் தாம் ஒரு களிற்றியானை வடிவங் கொண்டு சேர்ந்து, தமது திருவடிகளை மெய்யன்புடன் வழிபாடு செய்யும் அடியார்களுக்கு வரும் துன்பங்களை யெல்லாம் நீக்கியருளும் விநாயகப் பெருமான் தோன்ற அருள் செய்தார் என்பது.

இரண்டாம் பாடல்:-

மந்திர மாவதுநீறு வானவர் மேலதுநீறு
சுந்தர மாவதுநீறு துதிக்கப் படுவதுநீறு
தந்திர மாவதுநீறு சமயத்தி லுள்ளதுநீறு
செந்துவர் வாயுமைபங்கன் திருஆலவாயான்
திருநீறே.

## 5. இப்பாசுரம் எப்பதிகத்தில் உள்ளது?

திருநீற்றுப் பதிகத்து முதல் பாசுரமாகும்.

6. திருநீற்றுப் பதிகம் பாடியவர் யாவர்?

திருஞான சம்பந்தப் பெருமானார்.

7. இதனை எத்தலத்தில் பாடினார்?

கூன்பாண்டியனைச் சுரநோய் தாக்கியபோது சம்பந்தப் பெருமான் இப்பாசுரத்தைப் பாடி



பாண்டியனுக்குச் சம்பந்தர் திருநீறுபூசுங் காட்சி

திருவாலவாய்க் கோயில் மடைப்பள்ளிச் சாம்பரை அவன் உடம்பிற் பூசினார். உடனே சுரநோய் நீங்கியது.

8. இப்பாடலின் பொருள் யாது?

நினைப்பவனைக் காப்பது மந்திரம். அத்தகைய மந்திரப் பொருளாய் அமைந்தது இந்த விபூதி. தேவர்கள் விரும்பித் தரிப்பது இத் திருநீறு. அழகுப் பொருளாய் அமைந்தது இந்த நீறு. துதித்து வணங்கத் தகும் பெருமை வாய்ந்தது திருநீறு. சிவவாக்காகிய ஆகமங்களில் எடுத்துப் பேசப்படுவது இந்த விபூதி. தரித்த

வர்களை வழிப்படுத்திச் சிவபிரான் திருவடி சேர்ப்பிப்பது இத்திருநீறு. செப்பவளம்போலும் திருவாய் பொருந்திய உமையம்மையாரைப் பாகத்தேகொண்ட திருவாலவாய்ப் பெருமானுக்கு உரிமையுடையது இத்திருநீறும்.

9. திருவாலவாயிற் கோயில் கொண்ட சிவபிரானை எப்பெயர்களாற் குறிப்பர்?

சோமசுந்தரப் பெருமான் என்றும் சொக்கலிங்கப் பெருமான் என்றும் போற்றுவர்.

10. மதுரைக்குத் திருவாலவாய் என்ற பெயர் வந்த காரணம் யாது?

வம்மிசசேகர பாண்டியன் மதுராபுரிக்கு மதில் கட்ட நினைத்து அந்நகரத்தின் எல்லை தெரியாது மயங்கிச் சிவபிரானை வேண்டினான். அப்போது இறைவன் திருவருளால் அவரது திருக்கரத்தில் இருந்த பாம்பு புறப்பட்டுக் கிழக்கே சென்று தன் உடம்பை நீட்டி வலப்புறமாக மதுரை நகர் எல்லை முழுவதையும் வளைய விட்டுத் தன்வாலை வாயில் பொருத்திக் காட்டியது. அதனால் மதுரைக்குத் திருவாலவாய் என்ற பெயர் வந்தது.

# 4. திருநாவுக்கரசு நாயனர் தேவாரம்.


திருநாவுக்கரசு நாயனர்

தேவாரம் பாடியமூவருள் ஒருவராகிய சைவசமய குரவரே திருநாவுக்கரசு நாயனர் எனப்படுவர். அவரை அப்பர் என்றும் குறிப்பிடுவர். அவர் பாடிய தேவாரங்கள் நாலாம் ஐந்தாம் ஆருந் திருமுறைகள் என வகுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் மூன்று பாடல்களையே இப் பாடத்தில் படிக்கப் போகிறோம்.

தேவாரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

## விளக்க வினவிடை

1. இப்பாசுரம் எதனைக் குறிக்கிறது?

சிவபிரானது திருவடி நீழலின் திறம் இப் படிப்பட்டது எனக் குறிக்கிறது.

2. இதனைப் பாடியவர் யாவர்?

திருநாவுக்கரசு நாயனார்.

3. இதனை எப்போது பாடினார்?

திருநாவுக்கரசர் தமக்கு வந்த சூலைநோய் வருத்தச் சமணசமயம் விட்டுச் சைவம் புகுந்தமையால், சமணரது கேள்விப்படி பல்லவ மன்னன் அவரைச் சுண்ணாம்பு அறையில் இட்டு ஏழு நாள் பூட்டிவைத்தபோது பாடியது.

4. இப்பாடலின் பொருள்யாது?

எமது பரம பிதாவாகிய சிவபிரானது இணைந்த திருவடி நீழலின் திறம் வாயினால் எடுத்துச் சொல்லுந் தரத்துக்கு அப்பாற்பட்டது. ஆயினும், ஒருவாறு சொல்லுவதானால் குற்ற மற்ற வீணையின் விழுமிய ஓசையும், மாலைக்கால சூரிய ஒளியின் கதகதப்பும், வீசுகின்ற இளந் தென்றற் காற்றின் இன்சுகமும், இளவேனிற் கால வெம்மையும், வண்டுகள் ரீங்காரஞ் செய்யும் தாமரைத் தடாகக் குளிர்மையும் ஒருங்கு அமைந்த தன்மைக்கு ஒப்பிடலாம்.

5. மகேசுர பூசையில் பாடத்தரும் தேவாரம் எது?

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே.

6. இதனைப் பாடியவர் யாவர்?

அப்பர் சுவாமிகள்.

7. இப்பாசுரம் எப்பெயரால் குறிக்கப்படும்?

கோயில் திருச்குறுந்தொகை எனக் குறிக்கப் படும்.

8. கோயில் என்பது எத்தலம்?

உலகில் முதன் முதல் தோன்றியது சிதம்பரத் திருத்தலம். அதனால், கோயில் என்பது சிதம்பரம் எனப்படும் தில்லையம்பலத்தையே குறிக்கும்.

9. இப்பாசுரத்தின் பொருள் யாது?

உணவுப்பொருளாகிய சோற்றுக்கு மூலாதாரமான நெல்விளை வயல் பொருந்தியது தில்லையம் பலம்: அங்குள்ள திருச்சபை பொன் பொலிந்து விளங்குவது. அதனால் அது கனகசபை எனக் குறிக்கப்படும். கனக சபையிலே நடராசவள்ளல் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலாம் திருக்கூத்தை இடைவிடாது ஆடுகின்றார். இவ்வருங்காட்சியைக் கண்டு இன்புறுவதற்கு இந்த ஒரு பிறவி போதாது. இனிமேலும் இப்பிறவி வாய்க்குமோ என்பதாம்.

10 திருவங்கமாலை முதற்பாசுரம் யாது?

*தலையே நீ வணங்காய்*
*தலை மாலை தலைக்கணிந்து*
*தலையாலே பலி தேருந்தலைவனைத்*
*தலையே நீ வணங்காய்*

11. இதனைப் பாடியவர் யாவர்?

அப்பர் சுவாமிகள்.

12. இப்பதிகத்துக்கு ஏன் திருவங்கமாலை எனப் பெயர் வந்தது?

தலைமுதல் பாதம் ஈறாக உள்ள ஒவ்வொரு உறுப்பினாலும் மனிதன் செய்ய வேண்டிய சிவ தொண்டைக் குறிப்பதனால், இதற்கு இப்பெயரா யிற்று.

13. அப்பர்சுவாமிகள் எத்தலத்தில் இருந்து இதனைப் பாடினார்?

திருப்பூந்துருத்தியில் இருந்து பாடினார்.

14. இதன் பொருள் யாது?

எனது தலையே! எம்பிரான் திருமுன்பு தாழ்ந்து வணங்குவாயாக. எத்தனையோ பிரம தேவர்கள் அழிந்தொழிய அவர் தம் தலையோடு களை மாலையாக்கித் தம் சிரத்தில் சூடிக்கொண்டு ஒரு பிரம கபாலத்தைப் பிட்சாபாத்திரமாகக் கையிலேந்தி அகந்தை கொண்ட பிரமவிட்டுணுக் களிடம் இரத்தப்பலியேற்று அவர் தம் இறு மாப்பை அடக்கி அருள் புரிந்த பரம கருணை நிதியாகிய சிவபிரானை எனது தலையே! நீ வணங்குவாயாக.

# 5. சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் பாடிய மூவருள் ஒருவரான சைவசமய குரவர் ஆவர். அவர் பாடிய தேவாரங்கள் ஏழாந் திருமுறை எனப்படும். அவர் சிவபெருமானோடு தோழமை கொண்டு வணங்கிப் பேறு பெற்றவர். அதனால், அவர் தம்பிரான் தோழர் எனவும் குறிக்கப்படுவர். அவரது பதிகங்களில் இரண்டு பாடல்களை இப்போது படிப்போம்.



சுந்தரமூர்த்தி சுவாமிகள்

## விளக்க வினவிடை

1. சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதன் முதற் பாடிய திருப்பாசுரம் யாது?

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனெனலாமே.

**2. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் இயற்பெயர் யாது?**

நம்பியாரூரர்.

**3. சுந்தரர் தாம் பாடிய முதற்பாடலை, 'பித்தா' என்று ஏன் தொடங்கினர்?**

நம்பியாரூரர் மணக்கோலங் கொண்டு புத்தூர் சடங்கவி சிவாசாரியரது மகளை மணஞ் செய்யச் சென்றபோது சிவபெருமான் ஒருவயது முதிர்ந்த அந்தணராக வந்து அவரை மணஞ் செய்ய விடாது தடுத்து அவர் தமக்கு அடிமை என்று சாதித்தார். அப்போது சுந்தரர் அவரை 'நீர் ஒரு பித்தரோ'? என்று ஏசினர். பின்பு உண்மையை உணர்ந்த போது எம்பெருமானே தேவரீரை எப்படிப் பாடுவேன் எனக் கேட்ட சுந்தரருக்கு இறைவன் 'பித்தா' என்றே பாடு எனத் திருவாய்மலர்ந்தபடி பாடப் பட்டது.



இடபாரூடராகிய பார்வதி பரமசிவன்

**4. இப்பாடலின் பொருள் விளக்கம் யாது?**

ஆன்மாக்களுக்கு அருள் செய்ய வேண்டுமென்ற பித்துக்கொண்ட பெருமானே! அடைக்

கலம் புகுந்த பிறைச் சந்திரனை ஆதரித்துச் சூடிக் கொண்டவரே! அருளை ஆள்பவரே! அடியேன் மனத்துள் தேவரீரை எக்காரணத்தினாலோ மறவாமல் நினைத்துக் கொண்டிருக்கின்றேன். எமது தாயாகிய உமையம்மையாரை இடப்பாகங் கொண்டவரே! தென்திசைக்கண் அமைந்த திருவெண்ணெய் நல்லூரில் திருவருள் துறையில் கோயில் கொண்ட தலைவரே! தமியேன் தேவரீருக்கு அடிமையல்லேன்,—இனி நான் என்பது ஒன்று இன்றி அவனேயாகி அமைந்தேன் அல்லேன், என்று எவராலும் கூறமுடியாதே.

5. திருமழபாடியில் சுந்தரர் பாடிய முதற் பாசுரம் யாது?

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே.

6. திருமழபாடி என்ற சிவத்தலம் எங்குள்ளது?

காவேரி நதியின் வடகரையில் உள்ளது.

7. இப்பாடலின் பொருள் விளக்கம் யாது?

பொன் போன்ற அழகிய திருமேனியை உடையவரே! எதிர்த்து வந்த புலியின் தோலை உரித்து ஆடையாக அணிந்தவரே! மின்போல ஒளிரும் சிவந்த சடாமுடியில் நறுமணங்கமழும் கொன்றைமலர்மாலை தரித்தவரே! நிலை பெற்ற தலைவரே! மதித்தற்கு அரிய மாணிக்க மணி

யானவரே! திருமழபாடியில் திருவருள் சுரக்கும் தேவாதி தேவ! பெற்றதாய் போன்ற கருணையங்கடலே! தேவரீரை அன்றி இனிமேல் வேறு எவரை நினைந்து உருகுவேன்.

---

## 6. திருவாசகம்.

இது எட்டாந் திருமுறையாக வகுக்கப்பட்டது. சைவ சமய குரவர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசக சுவாமிகளாற் பாடப்பட்டது. மணிமணியான அழகிய பாடல்களைக் கொண்டமையால் திருவாசகத்துக்கு மணிவாசகம் என்ற பெயரும் பொருந்தியுள்ளது. திருவாசகப் பாடல்கள் எவர் மனத்தையும் உருக்க வல்லன.

### விளக்க வினவிடை

1. திருவாசகம் என்பது யாது?

சிவபிரானது திருவருட் பெருக்கைப் பற்றி அழகிய வார்த்தைகளால் பாடப்பட்ட பாசுரங்களே திருவாசகம்.

**2. அது எவராற் பாடப்பட்டது?**

சைவ சமய குரவர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பட்டது,

**3. திருவாசகத்தின் பெருமை எப்படிப்பட்டது.**

எவரது மனத்தையும் உருக்கவல்ல பாடல்கள் நிரம்பியது. ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமியர் ஆகிய எத்திறத்தவரும் விரும்பிப்படித்துப் பயனடையத்தக்க பல பகுதிகளை யுடையது.

**4. திருச்சாழல் என்பது யாது?**

திருவாசகத்தின் ஒருபகுதியாய், மகளிர் விளையாடி இன்புறத்தக்க இருபது பாடல்களைக் கொண்டது.

**5. அதன் முதற் பாடல் யாது?**

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடி?
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானுன் சாழலோ.

**6. மணிவாசகர் இதனை எந்தத் தலத்தில் எப்போது பாடினர்?**

இறைவனுணைப்படி மாணிக்கவாசக சுவாமிகள் சிவத்தல யாத்திரை செய்து முடித்து இறுதியாகச் சிதம்பரத்துக்கு வந்தார். அங்கே நடராசப் பெருமானை வணங்கிக்கொண்டு ஒரு பன்னசாலையில் யோகநிட்டை கூடியிருந்தார். அப்போது சிவபிரானது திருவிளையாடல் காரணமாக ஈழநாட்டிலிருந்து சமய வாதஞ் செய்யும்படி

சிதம்பரத்துக்கு வந்த பௌத்த குரு வினவிய வினக்களுக்குப் பிறவியிலேயே ஊமைப் பெண்ணுன ஈழவேந்தனது குமாரத்தி மணிவாசகர் திருமுன்பு இறையருளால் தகுந்த விடை கூறினள். அவற்றையே மணிவாசகர் திருச்சாழல் என்ற பெயருடன் அழகிய திருவாசகமாகப் பாடியருளினர். இப்பாடல்களின் முதல் இரண்டு அடிகள் ஒரு பெண் இன்னொருத்தியை வினவுவதாகவும், பின்னிரண்டு அடிகள் அதற்கு மற்றப் பெண் விடை கூறுவவாகவும் அமையும்.

7. இப்பாடலின் உரை விளக்கம் யாது?

உங்கள் சிவபெருமான் தம் உடம்பிற் பூசுவதோ வெண்மையாக நீறிய சாம்பல். அவர் ஆபரணமாகத் தரிப்பதோ சீறுகின்ற பாம்பு. சாம்பலைப் பூசிப் பாம்புகளைத் தரிக்கும் பித்துக் கொண்டவர் தம் வாயாற் பேசுவனதாமோ வேதங்கள் என்று நீங்கள் கூறும் சைவ சமய சாத்திரமாகுந் தகுதியுடையன?

சிவபிரான் சாம்பலைப் பூசினுலென்ன, பாம்புகளைத் தரித்தாலென்ன, வாயினுல் எவற்றைப் பேசினுலென்ன, எங்கள் பெருமான் எல்லா உயிர்களிடத்தும் ஒரேதன்மையான பேரன்பு உடையவர் என்பதை அறிந்து கொள்வாயாக என்பதாம்.

[இப்பாடல் அபிநயத்துடன் பாடி இன்புறத் தக்கது.]

# 7. புராணம்.

புராணம் என்ற சொல்லின் பொருள் பழையவரலாறு. அது தெய்வீகத் தன்மை வாய்ந்திருக்கவேண்டும். பல நீதிகளை மக்களின் மனத்தில் இலகுவாகப் பதியவைக்கும் ஆற்றல் புராணங்களுக்கு உண்டு. புனிதமான இடத்தில், ஆசாரசீலராய்ப் புராணங்களைப் படித்தல் வேண்டும்.

## விளக்க வினாவிடை

1. புராணம் என்பது யாது?

*தெய்வீகத் தன்மைவாய்ந்த பழைய வரலாறுகளை விரித்துக் கூறும் நூல் புராணம் எனப் படும்.*

2. சைவசமயிகள் போற்றி வழிபடும் மிகச் சிறந்த புராணம் எது?

*பெரிய புராணம்.*

3. அதற்கு அப்பெயர் வரக் காரணம் யாது?

*முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் சிவனடியார் உள்ளத்தில் எக்காலத்திலும் உறைவதனாலும், அளவிடமுடியாத பெருமைவாய்ந்த திருத்தொண்டர் தம் வரலாற்றைக் கூறுவதனாலும், சிவபிரானே அதனைப் பாடுவதற்கு அடி*

யெடுத்துக் கொடுத்தமையாலும் அது பெரிய புராணம் எனப் பெயர் பெற்றது.

4. அதனை இயற்றியவர் யாவர்?
சேக்கிழார் நாயனார்.

5. பெரியபுராணக் காப்புச் செய்யுள் யாது?
உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலா விய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

6. இதன் பொருள் யாது?
உலகிலுள்ள எல்லா உயிர்களாலும் உண்மை நிலையை உணர்ந்து எடுத்துப் போற்றுதற்கு அருமை வாய்ந்தவர் சிவபெருமான். அவர் அடைக்கலம் புகுந்த பிறைச் சந்திரனையும், கங்காதேவியையும் சடாமுடியில் தரித்துள்ளவர், அளவிடமுடியாத சோதிவடிவானவர், அழகிய பொன்னம்பலத்திலே ஐம்பெருந் திருக்கூத்தை இடைவிடாது ஆடுபவர், வீரக்கழலணிந்த செந் தாமரைப் பூப் போன்ற அவரது திருவடிகளை வாயார வாழ்த்தி வணங்குவோமாக என்பதாம்.

7. பெரிய புராணத்துக்குச் சமமாகப் போற்றப் படும் சிவபுராணம் வேறு யாது?
கந்த புராணம்.

8. கந்த புராணத்திற் கூறப் படுவது யாது?
முழுமுதற் கடவுளாகிய சிவபிரானே தமக் குரிய ஐந்து திருமுகங்களோடு அதோ முகமும் (கீழ்நோக்கிய முகம்) சேர்த்து ஆறுமுகப் பெரு

மாகச் அவதரித்து ஆன்மாக்களுக்கு அருள் செய்த வரலாற்றை மிக விரிவாகக் கூறுவது.

**9. அதனை இயற்றியவர் யாவர்?**

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்.

**10. அதன் காப்புச் செய்யுள்களில் முருகப் பெருமான் வழிபாடாக அமைவது யாது?**

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள்கள் போற்றிகாஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேண் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

**11. இதன் பொருள் யாது?**



கோழிக்கொடியுடன் மயில்வாகனத்தில் வேல்பிடித்த ஆறுமுகப்பெருமான்

ஆறு திருமுகங்களுக்கு வணக்கம். தடைப்படாது ஆன்மாக்கள் பொருட்டு முகந்தோறும் பெருகின்ற கருணைக்கு வணக்கம். கண்டவர், அறிந்தவர் ஆகிய எவரும் துதிக்கும்படியாக அமைந்து விளங்கும் பன்னிரண்டு திருப்புயங்களுக்கு வணக்கம். காஞ்சிபுரத்து விளங்குங்குமரக் கோட்டத்து மாமர நீழலில் கோயில் கொண்டு வீற்றிருக்கும் செல்வேள் என்னும் திருப்பெயர் பூண்ட சுப்பிரமணியப்

பெருமானது மலர் போன்ற திருவடிகளுக்கு வணக்கம். அப்பெருமானார் கொடியாகக் கொண்ட கோழிச் சேவலுக்கும், ஊர்தியாக அமர்ந்தருளும் மயிலுக்கும் வணக்கம், அவர் திருக்கரத்தில் வீற்றிருக்கும் ஞானசக்தியாகும் வேற்படைக்கு வணக்கம் வணக்கம் என்பதாம்.

---

## 8. உமாதேவியார் குழந்தைக்கு ஞானப்பால் கொடுத்தமை.

தென்னிந்தியாவிலே சோழவள நாட்டில் பிரமபுரம் முதலான பன்னிரண்டு திருப்பெயர்களைக் கொண்டது சீகாழி என்னுந் தலமாகும். அப்பதியிலே சிவபாத விருதயர் என்னும் அந்தண சீலருக்குப் பகவதியார் என்னும் அவரது பத்தினியாரிடத்து ஆளுடைய பிள்ளை என்னும் அருட்குழந்தை அவதரித்தார்.

அவர் மூன்றும் வயசிலே ஒரு நாள் தந்தையாருடன் தோணிபுரம் என்னும் திருக்கோவிலுக்குப் போனார். அங்கு அக்குழந்தையைக் கரையில் இருத்தி

விட்டுத் தந்தையார் திருக்குளத்தில் இறங்கி நீராடினுர். தந்தையைக் காணுத அக்குழந்தை "அம்மே! அப்பா" என அழுதது.

எங்கும் நிறைந்துள்ள இறைவனுகிய அம்மையப்பருக்கு அந்த அழுகையொலி கேளாதிருக்குமா? உடனே, உமாதேவியாருடன் தோணியப்பர் குழந்தையிடம் வந்தார். இருவரும் குழந்தையைக் கட்டியணைத்து அழுகையை மாற்றினர். இறைவனது திருக்குறிப்பின்படி உமாதேவியார் தமது திருத்தனங்களிலிருந்து ஞானமிருமாகிய பாலைப் பொற்கிண்ணத்திற் சுரந்து அக்குழந்தைக்கு ஊட்டினுர். பால் குடித்த குழந்தை ஞானக் குழந்தையாயிற்று. திருஞானசம்பந்தர் என்ற பெயரும் பெற்றது.

## விளக்க வினுவிடை

1. உமாதேவியார் எனப் போற்றப்படுபவர் யாவர்?

முழுமுதற் கடவுளாகும் சிவபிரானது சக்தியே உமாதேவியார் ஆவர்,

**2. உமாதேவியாரது திருக்குமாரர்களாகச் சொல்லப்படுபவர் யாவர்?**

*விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் என்னும் நால்வர்.*

**3. இவர்களுள் எவருக்காவது உமையம்மையார் நேரே பால் கொடுத்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறதா?**

*இல்லை.*

**4. அப்படி ஏன் அமையவில்லை?**

*விநாயகர் முதலிய நால்வரையும் சிவபிரானுக்கும் உமையம்மையாருக்கும் திருக்குமாரர்கள் என்பது உபசாரம் மாத்திரமேயாம். உண்மையில் அவர்கள் சிவபெருமான் கொண்டருளிய மூர்த்தங்களே யாவர். மனிதர்களே பசி முதலிய குறைவுகளுக்கு உட்பட்டவர்கள். இறைவனது ஞான சொரூபங்களான இத்தெய்வங்களும் ஞான நிறைவுடையன; குறைவுகளுக்கு உட்படாதவை. இதனால் ஞானப்பால் குடிக்க வேண்டியிருக்கவில்லை.*

**5. உமையம்மையார் எந்தக் குழந்தைக்குப் பால் கொடுத்தார்?**

*மூன்று வயசுப் பாலனாகிய திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்குப் பால் கொடுத்தார்.*

**6. அக்குழந்தையைப் பெற்ற தந்தையும் தாயும் யாவர்?**

சீகாழிப்பதியிலே சைவநெறி தழைக்க இல்லறம் புரிந்த சிவபாதவிருதயரும் பகவதியாரும் ஆவர்.

**7. உலகமாதா அக்குழந்தைக்குப் பால் கொடுக்க நேர்ந்த காரணம் யாது?**

ஒருநாள் அப்பிள்ளையாருடன் கோவிலுக்குச் சென்ற சிவபாத இருதயர் குழந்தையைக் கரையில் இருத்தி விட்டுக் குளத்தில் இறங்கி நீராடினர். தந்தையைக் காணாத குழந்தை 'அம்மையே! அப்பா!' என அழுதார். அப்போது பார்வதியும் பரமசிவனும் அக்குழந்தைக்கு முன் தோன்றி அழுகையை மாற்றிப் பால் கொடுத்தனர்.

**8. அம்மையார் அப்பிள்ளைக்கு எப்படிப் பால் கொடுத்தார்?**

பரஞானம் அபரஞானம் எனச் சிறப்பாகக் கூறப்படும் தம் திருத்தனங்களிலிருந்து ஆன்மாக்கள் பொருட்டுப் பெருகும் ஞானப்பாலை அம்மையார் பொற்கிண்ணத்தில் சுரந்து அப்பிள்ளைக்கு ஊட்டினர்.

**9. பால் குடித்த குழந்தைக்கு என்ன உதித்தது?**

மெய்ஞ்ஞானம் தோன்ற மனித இயல்பு மாறித் தெய்வீக வல்லமையாகிய உண்மையறிவு

உதித்தது. அதனால், அப்பிள்ளை அது முதல் ஞானக் குழந்தை யாகியது.

**10. இக்கதையால் புலப்படும் உண்மை யாது?**

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது.

**11. இந்த உண்மையைக் குறிக்கும் வாக்கு எந்த நூலிற் கூறப்பட்டது?**

இது "கொன்றை வேந்தன்" என்னும் நீதி நூலில் முதலிற் கூறப்படும் வாக்கியமாகும்.

**12. இந்த நீதி நூலை இயற்றியவர் யாவர்?**

ஔவையார்.

**13. இந்த வாக்கியத்தின் உண்மைப் பொருள் யாது?**

ஒவ்வொரு குழந்தைக்கும் பெற்றதாயும் தந்தையும் முதலில் அறிந்து வணங்கத் தகும் தெய்வமாவர், என்பது. அதாவது, எந்தக் குழந்தை தன்னைப்பெற்ற தாயையும் தந்தையையும் தெய்வமாகப் போற்றி வழிபடுகின்றதோ, அந்த வணக்கம் உலக அன்னைக்கும் பிதாவுக்கும் உரியதாகும் என்பதாம்.

# 9. கல்லே தோணியாகக் கடலில் மிதந்து கரையேறிய அப்பர்.

தமிழகத்தில் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் சைவ வேளாண் மரபில் புகழனுர் என்னுந் தவச் செல்வருக்கு மாதினியார் மணிவயிற்றில் உதித்தவர் மருள்நீக்கியார். அவருக்குச் சகோதரியாராக முன்பிறந்தவர் திலகவதியார். பெற்ருேர் ஒருங்கே சிவபதமடைந்தமையால் மனங்கலங்கிய மருள்நீக்கியார், யாதோ தவக் குறைவினுற் போலும் புறச்சமயமாகிய சமண நூல்களைக் கற்றுத்தேறி சைவசமயத்தை விட்டுச் சமண சமயம் புகுந்தார். அவரது திறமையைக் கண்ட சமணர் அவருக்குத் தருமசேனர் எனப் பெயரிட்டுத் தம் குருவாக்கிக் கொண்டனர்.

தம்பியார் சமண சமயம் புகுந்தமையை எண்ணி வருந்திய தமக்கை திலகவதியார் அவரைச் சைவத்துக்கு மீட்டுத் தரும்படி சிவபிரானிடம் அல்லும் பகலும் முறையிட்டு வந்தார். எம்பிரான்

தருமசேனருக்குச் சூலைநோயை வருவித்து அவரைச் சைவத்துக்கு மீட்டு ஆட்கொண்டருளினர். அதனைஉணராத சமணர் பல்லவ மன்னனது துணைக்கொண்டு அப்பர் சுவாமிகளுக்குப் பல இடையூறுகள் விளைவித்தனர். எம்பிரான் திருவருள் துணையாக அவருக்கு ஒரு துன்பமும் இல்லை.

## விளக்க வினாவிடை

1. பழைய காலத்தில் சைவசமயத்துக்கு இடையூறு விளைவித்த புறச்சமயம் யாது?

சமண சமயம். இதனை ஆருகத சமயம் என்றுஞ் சொல்வர்.

2. சைவ சமயத்திலே பிறந்தும் சமண சமயம் புகுந்து இடர்ப்பட்ட பெரியார் யாவர்?

அப்பர் சுவாமிகள்.

3. அப்பர் சுவாமிகளை மகவாகப் பெறப் பாக்கியம் செய்த பெற்றோர் யாவர்?

திருமுனைப்பாடி நாட்டிலே, திருவாமூரிலே, வேளாண் குலத்திலே தவ ஒழுக்கம் பூண்டிருந்த புகழனாரும் மாதினியாரும் ஆவர்.

4. அப்பருக்குப் பெற்ருேர் சூட்டிய பெயர் யாது?

மருணீக்கியார்.

5. இப்பெயரின் பொருள் என்ன?

மயக்கத்தை நீக்குபவர் என்பது அதன் பொருள்.

6. மருணீக்கியார் எதனுல் சமணசமயம் புகுந்தார்?

பெற்ருேர் ஒரே காலத்தில் சிவபதம் அடைந்தமையாலும், உண்மையான சமயம் எதுவென அவர் அப்போது அறியாமையாலும், முன்பிறவியிற் செய்த தவக்குறைவிஞலும் மருணீக்கியார் ஆருகத சமயம் புகுந்தார்.

7. சமணர்கள் மருணீக்கியாருக்கு என்ன சிறப்புச் செய்தனர்?

அவரது திறமையைக் கண்ட சமணர்கள் அவரைத் தங்கள் சமய குருவாக்கித் தருமசேனர் எனப் பெயரிட்டனர்.

8. மருணீக்கியார் சமணம் புகுந்தமையால் வருந்தியவர் யாவர்?

அவரது தமக்கையாகிய திலகவதியார்.

9 திலகவதியார் தமது தம்பியாரைப் பழைய படி சைவசமயத்துக்கு மீட்பதற்குச் செய்த உபாயம் யாது?

திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளிய சிவபிரானிடம் அல்லும் பகலும் முறையிட்டமை

யால் சிவபிரான் திருவருளால் தரும சேனருக்குச் சூலைநோய் வந்தது.

10. சூலைநோயால் வருந்திய தரும சேனருக்குச் சமணர் யாது செய்தனர்?

சமணர்கள் தமது திறமையினுல் வைத்தியஞ் செய்தும், மந்திரம் செபித்தும் நோய் மாருமையால் தருமசேனரைக் கைவிட்டனர்.

11. அப்போது தருமசேணர் யாது செய்தார்?

சமணர் அறியாதபடி திலகவதியாரிடம் வந்து அடைக்கலம் புகுந்தார்.

12. தம்பியாரைக் கண்ட, திலகவதியார் அப்போது யாது செய்தார்?

மருணீக்கியாரது அறியாமைக்கு வருந்திப் பின்பு அவரைத் திருவீரட்டானேசுவரர் முன்பு அழைத்துவந்து பணிவித்துத் திருநீறு பூசுவிக்கச் சூலைநோய் நீங்கிடது.

13. அப்பர் சுவாமிகள் உடனே யாது செய்தார்?

தம்மை ஆட்கொண்ட எம்பிரான் திருக்கருணையை வியந்து, தன்னைப் போல வருந்துபவர்களின் துன்பமெல்லாம் நீங்கும் பொருட்டு

"கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார்.

**14. அப்பருக்குத் திருநாவுக்கரசு என்ற பெயர் எப்படி வந்தது?**

"செந்தமிழின் சொல்வளப்பம் மிக்க பதிகம் பாடினமையால் நாவுக்கரசு என்னும் நற்பெயர் நினக்கு எங்கும் வழங்குவதாக" என்று ஓர் அசரீரி வாக்குப் பிறந்தது. அதுமுதல் மருணீக்கியாருக்குத் திருநாவுக்கரசு என்றும் வாகீசர் என்றும் பெயர் வழங்கலாயிற்று.

**15. இவற்றை அறிந்த சமணர் யாது செய்தனர்?**

சமணர்கள் அக்காலம் அரசுசெய்த மகேந்திர பல்லவ மன்னனது துணைக்கொண்டு அப்பருக்குப் பல துன்பங்கள் செய்தும் அவர் உயிர் பிழைத்தமையால் கடைசியாகக் கல்லுடன் சேர்த்து அவரைக் கட்டிக் கடலில் தள்ளினர்.

**16. கடலில் தள்ளப்பட்ட வாகீசர் யாது செய்தவர்?**

அப்பர் சுவாமிகள் எம்பிரான் திருவருளையே நம்பி "சொற்றுணை வேதியன்" என்று தொடங்கும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடினார்.

17. அப்போது நடந்த அற்புதம் யாது?

இறைவன் திருவருளால் கல்லோடு கட்டிய கட்டு அவிழ அக்கல்லே தோணியாக அவரைச்



கடலில் மிதக்கும் கல்லில் அப்பர் இருக்கும் காட்சி.

சுமந்து வந்து திருப்பாதிரிப்புலியூர்க் கரையிலே சேர்த்தது.

18. பின்பு திருநாவுக்கரசு நாயனர் யாது செய்தார்?

கரையேறிய அப்பர்சுவாமிகள் திருப்பாதிரிப்புலியூர்ப் பெருமானது திருச்சந்நிதியை யதுடைந்து பதிகம் பாடி வணங்கியபின் "ஆலயந் தொழுவது சாலவு நன்று" என்னும் ஔவை வாக்கைக் கடைப்பிடித்து மக்கள் உய்ய வேண்டித் தாமே தலயாத்திரை செய்து தேவாரம் பாடி வருவாராயினர்.

# 10. சிவபிரான் பன்றிக் குட்டிகளுக்குப் பால்கொடுத்தமை

மதுரைக்குப் பக்கமாக உள்ள ஒரு காட்டில் இராசராச பாண்டியன் என்னும் அரசன் துட்ட மிருகங்களைக் கொன்று குடிசனங்களைக் காப்பதற்காக வனவேட்டை ஆடினன். அப்போது ஒரு காட்டுப்பன்றி கொல்லப்பட்டது. அதனல், அப் பன்றியின் பன்னிரண்டு இளங் குட்டிகள் ஆதரவில்லாமல் வெய்யிலில் வாடித் தவித்தன. அப்போது பரம கருணைநிதியகிய சோமசுந்தரக் கடவுள் தாமே அந்தத் தாய்ப்பன்றி உருவுகொண்டு தோன்றி அக் குட்டிகளைக் காத்தருளினர்.

## விளக்க வினவிடை

1. "ஆருமற்றவருக்குத் தெய்வந்துணை" என்ற வாக்கியத்தின் பொருள்யாது?

"உதவி செய்வதற்கு எவருமே யில்லாத அநாதைகளைக் கடவுளே வந்து துணைச் செய்வார்" என்பது.

**2. சிவபெருமான் உயிர்களுள்ளே உயர்ந்த உயிர் தாழ்ந்த உயிர் எனப் பேதங் கருதுபவரா?**

ஒருபோதும் இல்லை. சிவபெருமான் அரசன் முதல் எறும்பு ஈறாக எல்லா உயிர்களையும் சமமாகக் கருதுபவரே யாவர்.

**3. பிராணிகளுக்குள்ளே மிக அருவருக்கத் தக்க பயங்கரமான பிராணியாது?**

காட்டுப் பன்றி.

**4. பழைய காலத்தில் அரசர்கள் மிருக வேட்டை யாடுவது ஏன்?**

துட்ட மிருகங்களால் குடிசனங்களுக்குத் துன்பம் நேராமலிருக்கும் பொருட்டே.

**5. மதுரையை அடுத்த ஒரு காட்டில் இராச ராச பாண்டியன் ஒருமுறை செய்த பன்றி வேட்டையால் நேர்ந்ததுயாது?**

ஒரு காட்டுப்பன்றி கொல்லபட்டமையால் அதன் பன்னிரண்டு இளங்குட்டிகள் வெய்யிலிற் கிடந்து வருந்தின.

**6. பன்றிக் குட்டிகளின் வருத்தங்கண்ட சிவபிரான் யாது செய்தார்?**

சர்வ ஜீவதயாபரர் ஆகிய சோமசுந்தரக் கடவுள் உடனே அந்தப் பன்னிரண்டு இளங்

குட்டிகளினதும் தாய்ப்பன்றியாக உருவுகொண்டு அவற்றின் பக்கலிலே கிடந்தார்.



தாய்ப்பன்றியும் 12 குட்டிகளும்.

**7. பன்றிக் குட்டிகள் யாது செய்தன?**

சிவபிரானாகிய தாய்ப்பன்றியிடத்தே முலை சுவைத்துப் பால் குடித்துக் களைப்பு நீங்கின.

**8. அதனால், என்ன அற்புதம் நடந்தது?**

சிவபிரானிடத்தே பால்குடித்த பெருமையினால் பன்னிரண்டு பன்றிக் குட்டிகளும் பன்றி முகச் சிறுவர்களானார்கள்.

**9. பின்பு அச்சிறுவர்கள் என்ன ஆனார்கள்?**

சோமசுந்தரக் கடவுள் இராசராசபாண்டியனது சொப்பனத்திலே தோன்றிக் கூறியபடி அரசன் அவர்களைத் தனக்கு மந்திரிமார் ஆக்கினான்.

**10. இக்கதையால் நாம் கற்றுக்கொள்ளும் உண்மையாது?**

"கடவுள் தாயிற் சிறந்த தயாபரன்" என்பது.

# 11. குண்டோதரனுக்கு அன்னமிட்டமை.

பாண்டிநாட்டை ஒருகாலம் ஆட்சி செய்தவன் மலையத்துவச பாண்டியன். அவன் செய்த தவப்பயனுக உமை யம்மையாரே அவனுக்கு மகவாகத் தோன்றினர். அவ்வம்மையார் தடா தகைப் பிராட்டி என்னும் பெயருடன் அரசாட்சி புரிந்தார். அவருக்கு மீனுட்சி என்னும் பெயரும் வழங்கியது.

முழுமுதற் கடவுளாகிய சிவபெரு மானே சௌந்தரபாண்டியனுகத் தோன் றிச் சிவகணங்களுடன் வந்து அம்மை யாரைத் திருமணஞ் செய்தார். திரு மணத்துக்கு ஆக்கிய உணவுப் பொருட் கள் மலைபோலக் குவிந்து எஞ்சியிருந் தன. அதனை என்னசெய்யலாம் என்று அம்மையார் இறைவனைக் கேட்டார்.

அப்போது சிவபிரானது திருவிளை யாட்டினுல் சிவகணத்தவருள் ஒருவ ரான குண்டோதரர் பசிவருத்தங்காரண மாக ஓலமிட்டார். அம்மையார் அவரை

அழைத்துச் சென்று உணவு கொடுக்க அவர் உண்டார். ஆனாலும், அவரது பசி தணியவில்லை. பாகம் பண்ணப் படாத தானியவகை, காய்வகை, பழ வகை, பால், தயிர் எல்லாவற்றையும் உண்டும் பசி தீரவில்லை.

மீனாட்சியம்மையார் இதுவிஷயத்தை இறைவனிடம் தெரிவித்தார். அப்போது எம்பிரான் அன்னபூரணியை நினைந் தருளினார், உடனே நான்கு குழி கொண்ட ஒரு பாத்திரத்தில் தயிர்ச் சாதம் அங்குத் தோன்றியது. குண்டோ தரர் அந்த அன்னத்தை உண்ணத் தொடங்கியதும் பசியடங்கியது. ஒரு குழி அன்னத்தைத்தானும் முற்றாக அவரால் உண்ண முடியவில்லை.

## விளக்க வினாவிடை

1. பாண்டிவளநாட்டுக்குக் கன்னி நாடு என்று பெயர் வந்த காரணம் யாது?

மலையத்துவச பாண்டியன் செய்த தவப் பயன் காரணமாக உலக மாதாவாகிய உமை யம்மையாரே தடாதகைப்பிராட்டி என்ற பெய ருடன் அவதாரம் செய்து கன்னியாகவே முடி

சூடி அரசாண்டமையால் பாண்டி நாடு கன்னி நாடு எனப்பட்டது.

2. தடாதகைப்பிராட்டியாரைத் திருமணஞ் செய்தவர் யாவர்?

முழுமுதற் கடவுளாகிய சிவபிரானே சௌந்தரபாண்டியனுகிவந்து திருமணஞ் செய்தார்.

3. திருமணதினத்தில் மணமகள் மணமகனிடம் செய்த முதல் முறைப்பாடு யாது?

'சுவாமீ! திருமணவைபவத்துக்குத் தேவரீர் அளவிறந்த சிவகணங்களுடன் எழுந்தருளுவதை எண்ணிச் சமைக்கப்பட்ட உணவு வகைகள் மலைபோல எஞ்சிக் குவிந்து கிடக்கின்றன. யாது செய்யலாம்?'' எனக் கேட்டார்.

4. அதற்குச் சிவபிரான் யாது கூறினர்?

தடாதகையே! கற்பக விருட்சமும் இங்கு வந்து உனக்குப் பணிபுரியும்போது உன் செல்வப் பெருக்கை உணர்கின்ருேம். ஆயினும், எம் சிவகணத்தவருள் பசியுடையவர் எவரும் இல்லைப் போலும், என் செய்யலாம்? என்ருர்.

5. உடனே நிகழ்ந்த அற்புதம் யாது?

சிவகணத்தவருள் ஒருவராகிய குண்டோதரர் "ஐயோ! பசி; பசி! என் பசி தீர ஒரு பிடி அன்னந் தருவார் இல்லையே". எனக் கூவி வருந்தினர்,

**6. பின்பு அம்மையார் யாது செய்தார்?**

சிவபிரான் புன்சிரிப்போடு அம்மையாரை நோக்க அம்மையார் குண்டோதரருக்கு அன்னமிடும்படி சேடியரை ஏவினர்.

**7. குண்டோதரர் யாது செய்தார்?**

குண்டோதரர் போசனசாலை புகுந்து உண்ணத் தொடங்கினர். கணப்பொழுது கழியுமுன் உணவு மலையில் ஒரு பருக்கையுமின்றி உண்டு முடிந்தது. ஆயினும் அவரது பசி தீரவில்லை.

**8. அம்மையார் என்ன செய்தார்?**

அம்மையார் சிவபிரானிடம் மீண்டு வந்து தலை குனிந்து நின்றார்.

**9. அம்மையாரிடம் பெருமான் யாது கேட்டார்?**

உணவு அதிகம் இருக்கிறதா? இன்னும் சிலரை அனுப்பலாமா? என்றார்.

**10. அம்மையார் அதனைக்கேட்டு என்ன கூறினர்?**

அன்னையார் நாணங்கொண்டு, "சுவாமீ! அடியாளது அறியாமைக்கு மன்னித்தருளுக. குண்டோதரரது பசியே இன்னுந் தீரவில்லை. அதனைத் தீர்த்தருள வேண்டும்" என்றார்.

**11. அப்போது பெருமான் செய்த திருவிளையாடல் யாது?**

அதுகேட்ட பெருமான் புன்சிரிப்புக்கொண்டு அன்னபூரணியை அங்கு வரும்படி திருவுளங்

கொண்டார். நான்கு குழி நிரம்பிய தயிரன்னத் துடன் ஒரு பாத்திரம் உடனே தோன்றியது. சிவபிரான் குண்டோதரனைப் பார்த்து அதனை உண்ணும்படி பணித்தார். குண்டோதரரால் ஒரு குழி அன்னத்தைத்தானும் முற்றாக உண்ண முடியவில்லை, பசி தீர்ந்தது.

---

## 12. பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி பட்டமை

பாண்டி நாட்டிலே திருவாதவூரில் அவதரித்தவர் சமயகுரவர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசக சுவாமிகள். அவரது இயற்பெயர் திருவாதவூரர். அரிமர்த்தன பாண்டியனுக்கு முதன் மந்திரியாக அவர் கடமை புரிந்தவர். அரசனுக்குக் குதிரைகள் வாங்கிவரும் படி அவர் கொண்டு சென்ற பொருள் முழுவதையும் திருப்பெருந்துறையில் தம்மையாட்கொண்டருளிய பரமாசாரிய ரிடம் ஒப்புவித்தார். அதனுல் கோபங் கொண்ட பாண்டியன் அவரை வெய் யிலில் நிறுத்தி வருத்தம் செய்வித்தான். இறைவனுணையால் அவரது துன்பத்

தைத் தீர்க்கும்படி வைகை நதி பெருகி மதுரையை அழிக்கும்படி பரந்தது. அதுகண்ட அரசன் தன்பிழையை உணர்ந்து திருவாத வூரரை அழைத்துத் தன்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டான். வைகையாற்றுக்கு அணை கட்டும்படி மதுரைமாந்தர் யாவருக்கும் தனித்தனி கோலறை அளந்துவிடப் பட்டது.

மதுரையில் பிட்டவித்து விற்றுச் சீவனம் செய்தவர் செம்மனச் செல்வி என்னும் பெயருடைய ஒருதவ மூதாட்டி, அவரோ தாய், தந்தை, மக்கள் சுற்றம் எவருமே இல்லாத ஓர் அநாதை. அவருக்கும் ஆற்றங்கரையில் ஒருபங்கு குறிக்கப்பட்டது. அவ்வம்மையாருக்குக் கூலியாள் எவருமே கிடையாமையால் அவர் எம்பெருமானை வேண்டினர். இறைவனே ஒரு கூலியாளாகி அம்மையார் முன் தோன்றி அவர் கொடுத்த பிட்டினை ஏற்று உண்டபின் அவரது ஆற்றங்கரைப் பங்கை அடைக்க ஒப்புக் கொண்டார். ஆயினும் அப்பங்கு சரி

யாக அடைக்கப்படாமையால் அரச கட்டளைபெற்ற அதிகாரி சிவபிரானாகிய கூலியாளருக்குப் பிரம்பினால் அடித்தான். பெருமான் உடனே மறைந்தருளினார். அந்த அடி உலகிலுள்ள எல்லா உயிர்கள் மீதும் பட்டது.

## விளக்க வினாவிடை

1. மாணிக்கவாசக சுவாமிகளது இயற்பெயர் யாது?

திருவாதவூரடிகள்.

2. திருவாதவூரர் முதலில் யாருக்கு என்ன கடமை புரிந்தார்?

மதுரையில் அரசு புரிந்த அரிமர்த்தன பாண்டியனுக்கு முதன் மந்திரியாகக் கடமையாற்றினார்.

3. பாண்டியனுக்குத் திருவாதவூரர் செய்த தவறு யாது?

குதிரை வாங்கும்படி பாண்டியன் கொடுத்த செல்வம் முழுவதையும் திருவாதவூரர் திருப்பெருந்துறையிலே தம்மையாட்கொண்ட பரமாசாரியர் திருமுன்பு ஒப்புவித்தபின் தன்கடமையை மறந்து இருந்தமையாகும்.

4. அதனை அறிந்த பாண்டியன் யாது செய்தான்?

திருவாதவூரருக்கு ஓலைபோக்கி அழைப்பித்து அவரைக் கொடிய வெய்யிலில் நிறுத்தித் தன் பொருளை மீட்டுத்தரும்படி தண்டித்தான்.

5 தண்டனை பெற்ற திருவாதவூரர் யாது செய்தார்?

தம்மையாட்கொண்ட பரமாசாரியாரை நினைந்து உருகித் தமது துன்பத்தை நீக்கும்படி வேண்டினர்.

6. எம்பிரான் அவரது துன்பத்தை எவ்வாறு நீக்கினர்?


மதுரையில் பாய்கின்ற வைகை நதியைப் பெருகச் செய்து வெப்பத்தைத் தணித்தார்.

7. வைகைநதிப் பெருக்கினல் நேர்ந்தது யாது?

மதுராபுரிப் பட்டணமே அழியும் நிலையடைந்தது. அதனல் உண்மையை உணர்ந்த அரசன் திருவாதவூரரை அழைத்து மன்னிப்புக் கோரி மதுரை மாந்தர்களைக் கொண்டு வைகைக் கரையை அடைப்பிக்கும்படி வேண்டினன். அதனை ஏற்றுக்கொண்ட மந்திரியார் மதுரை வாசிகள் ஒவ்வொருவருக்கும் ஆற்றங்கரைப் பங்கு அளந்து குறித்து அடைப்பித்தார்.

8. வைகைக்கரை அடையாதவர் யாரும் உண்டா?

செம்மனச் செல்வி என்னும் பெயருடைய நரை மூதாட்டி.



செம்மனச் செல்வி

9. அவரது சீவியம் எப்படி நடந்தது?

அவர் பிட்டினை அவித்து விற்றுச் சீவித்து வந்தார்.

10. அவருக்கு நேர்ந்த துன்பம் யாது?

வைகைக்கரைப்பங்கு அடைப்பதற்குக் கூலியாள் இல்லாமையால் அவ்வம்மையார் சோமசுந்தரர் திருக்கோயிலை அடைந்து எம்பிரானிடம் முறையிட்டார்.

11. அந்த முறையீட்டின் பயன்யாது?

சோமசுந்தரக்கடவுளே தாம் ஒரு கூலியாளாகித் தலையில் கூடையும் தோளில் மண் வெட்டியும் கொண்டு வந்து "எனக்கு வேலை தருவார் உண்டோ" எனக் கூவினர்.

**12. அதனைக்கேட்ட அம்மையார் யாது செய்தார்?**

"தம்பி! எனது ஆற்றங்கரைப் பங்கை அடைப்பாய்" என்றார்.

**13. பெருமான் அதற்கு யாது கூறினர்?**

"அம்மே! யானோ பசியுடையேன் முற்கூலி தருவாயாயின் அடைப்பேன்." என்றார்.

**14. கேட்ட வந்தி யாது கூறினள்?**

"தம்பி! இப்பொழுது உண்பதற்கு இனிய பிட்டுத்தருகிறேன். இன்றேல், வேலையை முடித்தபின் மாலைக்காலம் வருவாயாயின் பிட்டைவிற்றுக் கூலிதருவேன்", என்றார்.

**15. பெருமான் யாது செய்தார்?**

உண்பதற்கு பிட்டமிர்தமே வேண்டும், காசு வேண்டாம், பிட்டுத் தந்தாற் போதும் எனக்கூறி அம்மையாரிடம் பிட்டுவாங்கித் தின்றுகொண்டே ஆற்றங்கரையை அடைந்தார்.

**16. அம்மையார் பின்பு யாது செய்தார்?**

கூலியாளரைக் கூட்டிச்சென்று சோலறை யைக் காட்டி அடைக்கும்படி வேண்டினர்.

**17. எம்பெருமான் எப்படி அடைத்தார்?**

எம்பிரான் விளையாட்டாகவே மண்ணை வெட்டி ஒருமுறை இட்டபின் களைத்தவர் போலப் படுத்து அயர்ந்தார். ஆயினும், பங்கு

ஓரளவுக்கு அடைக்கப்பட்டிருந்தது. ஏனைய பங்குகளிலும் உயரம் குறைவாகவே காணப் பட்டது.

18. பின்பு என்ன நடந்தது?

அதிகாரிகள் அணைக்கட்டுக்களைச் சரிபார்த்த போது செம்மனச் செல்வியின் பங்குமாத்திரம் குறைவாகக் கட்டப்பட்டிருந்ததைக் கண்டு விசாரணை செய்தனர். கூலியாளன் செய்த பிழையை அறிந்தனர்.

19. பிழையை அறிந்த அதிகாரி என்ன செய்தான்?

கூலியாளனைப் பிடித்து நிறுத்திக் கேட்ட போது பெருமானாகிய கூலியாளர் அஞ்சினவர் போலப் பதில் பேசாதிருக்கவே, அதிகாரி தனது கைப் பிரம்பினால் அடித்தான்.

20. உடனே என்ன நடந்தது?

அடிபட்ட கூலியாளரைக் காணவில்லை. அடித்த அடியானது அதிகாரியின்மீது பட்டது. அரசன் உடம்பிலும் பட்டது. அங்கிருந்த எல்லாருடைய உடம்பிலும் பட்டது. அகில உலகத்துமுள்ள உயிர்கள் மீதெல்லாம் அவ்வடி பட்டது.

21. பெருமானாகிய கூலியாளருக்கு அடித்த அடி அகில உயிர்கள்மீதும் பட்ட காரணம் யாது?

முழுமுதற் கடவுளாகிய சிவபிரானே சகல சீவராசிகளாகவும் திருமேனி கொண்டு விளங்கு

கிறார் என்ற தத்துவத்தை (உண்மையை) அகில உலகத்தவர்களுக்கும் உணர்த்தியவாறும்.

**22. இக்கதையால் நாம் அறிவது யாது?**

அடியவர் பொருட்டு வெளிவந்து அருளு பவர் எம்பெருமான் என்பதேயாகும்.

---

## 13. முருகப்பெருமான் ஔவையாருக்கு அருள்செய்தமை.

ஔவையார் திருவள்ளுவருக்குச் சகோதரியாவர்; அறிவிலே சிறந்தவர், தமிழ்ப்புலமை வாய்ந்தவர், தெய்வ அருளுடையவர், தாம் விவாகம் செய்து கொள்ளாமலே கலைத்தொண்டு செய் தவர், பல அரசர்களின் அன்புக்கு இடமாயிருந்தவர், ஆத்திசூடி முதலாக அருமையான நீதிநூல்கள் பல செய் தவர்.

அவர் தலயாத்திரை செய்யும்போது ஒருநாள் வழிநடந்து களைத்து ஒரு நாவல்மர நிழலில் இளைப்பாறிக்கொண் டிருந்தார். அவருக்குத் தண்ணீர்த் தாகமாக இருந்தது. அண்ணாந்து பார்த் தார் அம் மரத்தில் ஒரு இடைச்சிறுவன்

நாவற் பழங்களைப் பறித்து அருந்திக் கொண்டிருந்தான். அச் சிறுவனிடம் தமக்கும் சில நாவற்பழம் தரும்படி ஔவையார் கேட்டார். அதற்குச் சிறுவன் சுட்டபழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா எனப் பதில் கேட்டான். அவர் திகைப்படைந்து சுட்ட பழமே தரும்படி கேட்டார். அவன் கனிந்த பழங்களை மண்ணில் வீசி எறிந்தான். ஔவையார் அவற்றைப் பொறுக்கி எடுத்து ஊதி ஊதி உண்டு தாகந்தீர்த்தார்.

## விளக்க வினுவிடை

**1. ஔவையார் என்பவர் யார்?**


ஔவையார்.

அறிவிற்சிறந்த ஒரு பெண்பாற் புலவர். தாம் விவாகம் செய்து கொள்ளாமல் கல்வித் தொண்டு செய்து உலகுக்கு உதவிபுரிந்த ஒரு தவமூதாட்டியாவர். பல நீதி நூல்கள் செய்தவர்.

**2. ஔவையார் ஒவ்வொருநாளும் எந்த மூர்த்தியைப் பூசைசெய்து வணங்கி வந்தார்?**

விநாயகப் பெருமானைப் பூசித்து வணங்கி வந்தார்.

3. அதனால், ஔவையாருக்கு முருகபத்தி இல்லையோ என உலகத்தவர் ஐயப் படுவர் எனத் திருவுளங் கொண்ட முரு கப் பெருமான் என்ன செய்ய நினைத்தார்?

*ஔவையாரிடத்தே ஒரு திருவிளையாட்டுச் செய்ய நினைத்தார்.*

4. ஔவையார் ஒருபோதும் என்னசெய்ய மாட்டார்?

*அவர் ஒரே இடத்தில் நெடுங்காலந்தங்கி இருக்கமாட்டார். தலயாத்திரை செய்வதே அவர் தம் கலைத்தொண்டுக்கு வாய்ப்பாக இருந்தது.*

5. ஒருநாள் வழிநடந்து களைப்புற்ற ஔவையார் யாது செய்தார்?

*வழியில் ஒரு நாவல் மரநிழலில் ஆறி யிருந்தார்.*

6. அவருக்கு அப்போது என்ன நேர்ந்தது?

*தண்ணீர்த் தாகமாக இருந்தமையால் அண் ணாந்து பார்த்தார்.*

7. மரத்தில் யாரைக் கண்டார்?

*மாடுமேய்க்கும் சிறுவன் ஒருவன் மரத்தில் இருந்து நாவற்பழம் தின்பதைக் கண்டார்.*

8. ஔவையார் சிறுவனைப்பார்த்து என்ன கேட்டார்?



"தம்பி! தண்ணீர்த்தாகமாக இருக்கிறது, நாவற்பழம் பறித்துத் தருவாயா" எனக் கேட்டார்.

9. அதற்குச் சிறுவன் கூறிய பதில்யாது?

"பாட்டீ! உமக்குச் சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா?" என்ருன்.

10. அதைக்கேட்ட கிழவி யாது செய்தாள்?

சிறுவன்கேட்ட வினுக்களுக்கு விடைகூறத் தெரியாது சிறிது திகைப்படைந்தார். மரத்திலிருக்கும் பழங்களில் சுட்டபழம் எப்படி இருக்க முடியும் என்பதே ஔவைக்கு நேர்ந்த ஐயம். பின்பு, ஒருவாறு துணிந்து, "தம்பி! சுட்ட பழத்தையே தருவாயாக" என்ருர்.

11. அப்போது சிறுவன் யாது செய்தான்?

மரத்திலே இருந்த நன்ருகக் கனிந்த பழங்களைப் பறித்து மணலிலே விழும்படி வீசியெறிந்தான்.

12. ஔவையார் அப்போது யாது செய்தார்?

எழுந்து சென்று மணலில் விழுந்த கனிகளைப் பொறுக்கி மணல்போக ஊதி ஊதி வாயிலிட்டார்.

13. அதைக்கண்ட சிறுவன்யாது கூறினன்?

"பாட்டி! பழம் நன்ருகச் சுடுகிறதா?" என்று கேட்டான்.

**14. அதுகேட்ட ஔவையார் யாது கூறினார்?**

எத்தனையோ பெரிய வித்துவான்களையெல்லாம் வாதிலே வென்ற என்னை இந்த இடைச்சிறுவன் வென்றுவிட்டானே என வெட்கித் தலைகுனிந்து,

"கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடரி
இருங்கதலித் தண்டுக்கு நாணுமே—பெருங்காவில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான் தோற்றேன்
ஈரிரவுந் துஞ்சா தென்கண்"

என்ற வெண்பாவைப் பாடினார்.

**15. அப்போது என்ன நடந்தது?**

ஔவையாருக்கு முருகப்பெருமான் காட்சி கொடுத்து அவரது துன்பத்தை மாற்றினார்.

---

## 14. விநாயகப் பெருமான் அகத்திய முனிவருக்கு அருள்செய்தமை.

திருக்கைலாய மலையில் பார்வதிக்கும் பரமசிவனுக்கும் திருமணம் நடந்தது. அந்தக் காட்சியைக் காண்பதற்கு அகில உலகத்திலுள்ளவர்களும் அங்குச் சென்றிருந்தனர். அதனால், பூமியின் வடபுலந் தாழ்ந்து தென்புலம் உயர்ந்தது. அதனைச் சமப்படுத்துவதற்குக் குறு

முனிவரும் தவத்தால் பெரியவருமான அகத்தியரைத் தெற்கே போகும்படி சிவபிரான் பணித்தார். திருமணக்காட்சியை அகத்தியருக்குத் தென்புலத்திலே காட்டுவதாகச் சிவபிரான் வாக்களித்து அகத்தியரது கமண்டலத்தில் கங்கை நீரில் ஒரு துளியைக் கொடுத்து அனுப்பினுர்.

அகத்தியர் வரும் வழியில் வில் வலன் வாதாவி என்னும் இரு அசுர சகோதரர் அவரைக் கொல்ல முயன்றனர். அகத்தியர் தமது தவ வலிமையால் அவர்களை அழிவுறச் செய்தமையால் அந்தப் பாவந்தீரக் கோங்க நாட்டில் இருந்து சிவபூஜை செய்தார். அப்போது


அகஸ்தியர்

சோழநாட்டுக்கு நீர்வளம் வேண்டுமென இந்திரன் முயன்று விநாயகப் பெரு

மாரீனை வேண்டினன். அவர் அவனது வேண்டுகோளின்படி காகவடிவாகச் சென்று அகத்தியரது கமண்டலத்தைக் கவிழ்த்தார். அதனால் பெருகியதே காவிரியாறு ஆகும்.

## விளக்க வினவிடை

**1. அகத்திய முனிவர் என்பவர் யார்?**

குறுத்த வடிவமுடையவர். தவத்தால் மிகவும் பெரியவர். பொதிய மலையை இருப்பிடமாகக் கொண்டவர். தமிழுக்கு மூதன் முதல் இலக்கணம் வகுத்தவர்.

**2. அகத்திய முனிவர் பொதிய மலைக்கு வரக் காரணம் யாது?**

திருக்கைலாய மலையில் பார்வதிக்கும் சிவபிரானுக்கும் திருமணம் நிகழ்ந்தது. அப்போது எல்லா உலகத்தவரும் அங்குச் செல்ல பூமியின் வடபுலம் தாழ்ந்து தென்புலம் உயர்ந்தது. அதனால், பூமியைச் சமப்படுத்துவதற்காகச் சிவபிரான் ஆணைப்படி அகத்தியர் பொதியமலை நோக்கி வந்தார். வரும்போது சிவபிரான் கொடுத்த பொன்னி தீர்த்தத்தைக் கமண்டலத்தில் அடக்கிக் கொண்டு வந்தார்.

**3. வரும் வழியில் அவருக்கு நேர்ந்தது யாது?**

வில்வலன் வாதாவி என்னும் இரு அசுர சகோதரர் அகத்தியரைக் கொல்ல நினைத்தவர்,

ஈற்றில் அகத்தியராற் கொல்லப்பட்டனர்.

4. அதன் பின் அகத்தியர் யாது செய்தார்?

அவர்களைக் கொன்ற பாவந்தீரக் கோங்க நாட்டில் இருந்து அகத்தியர் சிவபூசை செய்தார்.

5. அப்போது இந்திரன் - விநாயகப் பெருமானை வழிபாடு செய்து எதனை விண்ணப்பஞ் செய்தான்?

"சோழநாடு நீர்வளமில்லா திருக்கிறது. சுவாமீ! தேவரீர் அகத்திய முனிவரது கமண்டலத்தில் இருக்கும் பொன்னியைப் பெருகச் செய்ய வேண்டும்" என விண்ணப்பித்தார்.

6. அதற்கு இணங்கிய பிள்ளையார் யாது செய்தார்?

காக வடிவாகச் சென்று அகத்தியரது கமண்டலத்தைக் கவிழ்த்தார்

7. அப்போது அகத்தியர் யாது செய்தார்?

காக்கையைத் துரத்தக் கையை ஓங்கினர். அந்த நெறியே பொன்னி நதி பெருகிச் சோழ நாடெல்லாம் பரவியது.

8. பொன்னியாற்றுக்குக் காவிரி யாறு என்ற பெயர் ஏன் வந்தது?

கமண்டலத்தில் அடங்கியிருந்த பொன்னி தீர்த்தம் காகத்தினல் விரித்துப் பெருகப் பெற்றதனல் காவிரி எனப் பெயர் பெற்றது.

9. விநாயகப் பெருமான் உடனே யாது செய்தார்?

தாம் கொண்ட காக்கை வடிவை விட்டு ஒரு பிராமணச் சிறுவனாக அகத்திய முனிவர் முன் தோற்றினார்.

10. உண்மையை அறியாத அகத்தியர் யாது செய்தார்?

இச்சிறுவனன்றோ எமது கமண்டலத்தைக் கவிழ்த்தவன், இவன் தலைகிழியக் குட்டுவேன் என அகத்தியர் சீற்றங்கொண்டு தமது இரு கைகளையும் பொத்தியபடி சிறுவனைத் துரத்தினார்.

11. பிள்ளையார் யாது செய்தார்?

அகத்தியரது பிடிக்கு அகப்படாமல் அவருக்கு முன்னும், பின்னும், வலமும், இடமும், மேலும், கீழும் தோன்றிச் சிறிது விளையாடினார்.

12. பின்பு அகத்தியர் யாது செய்தார்?

சிறுவனது மாயச் செயலைக் கண்டவுடன் கோபத்தை விட்டுச் சிறிது சிந்தித்தார், உண்மையை உணர்ந்தார் அப்போது பெருமான் காட்சி கொடுக்க அவரை வணங்கி அகத்தியர் விநாயகப்பெருமானது அருளைப்பெற்றார்;

—

# 15. நல்லூர் கந்தசுவாமி கோவில்


நல்லூர் சரித்திரப் பழமை வாய்ந்த ஒரு நகரம். ஈழவழநாட்டு வடபாகத்து யாழ்ப்பாண மத்தியில் உள்ளது. சிங்கையாரியச் சக்கரவர்த்தி என்ற தமிழ் மன்னன் அதனை இராசதானியாகக் கொண்டு அரசாண்ட காலத்தில் ஒரு முருகன் ஆலயத்தைத் தாபித்தான். அது பிற்காலத்தில் போர்த்துக்கேயர் என்னும் பிறமதத்தவரால் அழிக்கப் பட்டபோதிலும் மீளவும் திருப்பிக் கட்டப்பட்டு இன்று நல்லூர்க் கந்தசாமி கோயில் என்று பாராட்டப்படுகிறது. அங்கு மூலஸ்தானத்தில் முருகன் கை வேல் தாபித்து வழிபடப்படுகிறது. ஆண்டுதோறும் ஆவணி மாசத்தில் இருபத்தைந்து நாட்களுக்குப் பெருந் திருவிழா அங்கு நடைபெறும்.

## விளக்க வினாவிடை

1. நல்லூர் என்பது யாது?

அது ஒரு பழைய நகரம், ஈழவள நாட்டு வட பாகத்தில் யாழ்ப்பாண மத்தியில் உள்ளது.

தமிழ் மன்னர் காலத்தில் அது இராசதானியாக இருந்தது.



நல்லூர் கந்தசுவாமி கோவில்

**2. இன்று அங்குள்ள சிறப்பு யாது?**

ஏறக்குறைய எண்ணூறு வருடங்களுக்கு முன், "சிங்கையாரியச் சக்கரவர்த்தி" என்ற தமிழ் மன்னன் தாபித்த கந்தசுவாமி கோவில் இடையில் போர்த்துக்கேயர் என்னும் புறமதத்தவரால் இடித்து அழிக்கப்பட்டபோதிலும் மீளவும் கட்டப்பட்டு இன்று சிறந்து விளங்குகிறது.

**3. நல்லூர்க் கோயில் அமைப்பு எப்படிப்பட்டது?**

அழகிய கோபுரமும், திருமதிலும், திருக்குளமும், திருவீதியும், திருநந்தவனமும் கொண்டது. மூலத்தானத்தில் முருகப்பெருமான் திருவுருவுக்குப் பதிலாக ஞானசக்தி எனப்படும் முருகன்

கைவேல் வைத்து வழிபாடு செய்யப்படுகிறது. சுற்றுப்புற மூர்த்திகளாக ஆறுமுகப்பெருமான், முத்துக்குமாரசுவாமி, விநாயகர், கண்ணபிரான், பழனியாண்டவர் என்னும் மூர்த்திகளுக்கு ஆலயங்கள் அமைந்திருக்கின்றன.

4. அங்கு வருடப் பெருந்திருவிழா அமைப்பு யாது?

ஆண்டுதோறும் ஆவணி அமாவாசை ஈறாக இருபத்தைந்து நாட்கள் கொண்டதான பெருந்திருவிழா ஆரம்பதினத்தில் கொடியேற்று வைபவம் நடைபெறும். முருகப்பெருமான் திருவருளைப்பெறப் பல இடங்களிலிருந்தும் மக்கள் திரள் திரளாக விழாக்காலம் வந்து கூடுவர். கொடியேற்று விழா, பத்தாந்திருவிழா, கார்த்திகைவிழா கைலாய வாகன விழா, பெரும் சப்பிர விழா, தேர், தீர்த்தம், பூங்காவனம் என்பன அவற்றுள் மிக்க சிறப்புடையன.

5. நல்லூர்க் கோவிலிற் காணப்படும் பெருஞ் சிறப்பு யாது?

இன்னது எனச் சொல்லமுடியாது எவரையும் கவரக்கூடிய ஒரு சக்தி அச்சந்நிதியில் காணப்படுகிறது. அந்த மனத்தூய்மை உண்டாகக் கூடிய புறச்சுத்தம் நன்கு பேணப்படுகிறது. நித்திய பூசையிலும், விழாக்காலத்திலும் காலந்தவறாத நிகழ்ச்சிக் கிரமம் மிகக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஈழநாட்டிலே சரித்திரப் பழமைவாய்ந்த முருகன் ஆலயங்


MILK WHITE

களுள் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலும் ஒன்று என்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

6. நல்லூர் முருகப் பெருமான்மீது பாடப்பட்ட பாடல்கள் உண்டா?

ஆம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும் வேறு பல பெரியார்களும் பாடியிருக்கிறார்கள். அவற்றுள் நாவலர் பாடிய வாழிச் செய்யுள் பின் வருமாறு:-

அருணவிக சிதகமல மலரைநிகர் தருவதன
மாறுமநு தினமும் வாழி
அமரர்தொழு கனகசபை நடனமிடு பரமசிவ
னருண்முருகர் சரணம் வாழி
கருணைமழை பொழிபனிரு நயனமதி னெடுவலிய
கவினுலவு தோள்கள் வாழி
கனகிரியை இருபிளவு படவுருவு நெடியவயில்
கரதலத் தினிது வாழி
வருணமர கதவழகு திகழவரு மவுணனெனு
மயிலினெடு சேவல் வாழி
வனசரர்த மரசனுத வியகுறமி னெடுகடவுண்
மயிலிவர்க டினமும் வாழி
தருணமிது வெனவமரர் பணிநல்லை யமர்கந்தர்
தமதடியர் நிதமும் வாழி
சகசநிரு மலபரம சுகிர்தபரி பூரண
சடக்ஷரம் வாழி வாழி.



சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம். J. 92/64